பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 14 வெள்ளிக்கிழமை 29.11.2024 | அதிர்வு 120

## மின்சாரம் தாக்கி தம்பதி மரணம்!

### புத்தளத்தில் சோகம்

மின்சாரம் தாக்கியதில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

புத்தளம், முந்தலம் – 412 ஏக்கர் 04 ▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தேர்தல் பெறுபேற்றை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியாது!

## சீனத் தூதுவரின் கருத்துக்கு யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் பதிலடி

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு உள்ளாகி வரும் நிலையில் தொடர்ந்தும் எமது உரிமைகளுக்காகப் போராடி வரும் இனமாகவே தமிழினம் காணப்படுகின்றது என்றும், அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியாது என்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சோம பாலன் தெரிவித்தார். 03 ▶

# வடக்கின் வெள்ள அனர்த்தம் குறித்து ஆளுநருடன் சிறீதரன் எம்.பி. சந்திப்பு

வடக்கின் வெள்ளப் பேரிடர் பாதிப்பு தொடர்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.



இன்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான உடனடி உதவிகளை வழங்கல், காலநிலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இரணைமடுக் குளத்தின் தற்போதைய நிலை: நேரில் சென்று பார்வையிட்ட சிறீதரன் எம்.பி.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இரணைமடுக் குளத்தின் தற்போதைய நிலை தொடர்பாக நேரில் சென்று அவதானித்தார்.

இதன்போது கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரான பொறியியலாளர் க.கருணாநிதி மற்றும் கிளிநொச்சி கிழக்கு பிரிவுக்கான நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரகாஸ் ஆகியோரையும் நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.





# மட்டு. மாவட்ட தமிழரசு எம்.பிக்கள் கிழக்கு ஆளுநருடன் நேரில் சந்திப்பு

## அனர்த்த முகாமை தொடர்பில் ஆராய்வு



கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் ஆகியோரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று நேரில் சந்தித்து உரையாடினார்கள்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டம் எதிர்நோக்கியுள்ள வெள்ள அனர்த்தம் தொடர்பில் பேசப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ உறுப்பினர்களும், உள்ளூராட்சி மன்ற பிரதி ஆணையாளர் மற்றும் அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் குறித்து பேசப்பட்டது.



மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பினாலும் கூட பல விடயங்களை கருத்தில்கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. அநேகமான பாலங்கள், பாதைகள் போன்றன சேதமடைந்துள்ளன. இதனைப் புனரமைப்பு செய்வதற்குரிய ஆயத்தங்கள் மிக விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சந்திப்பில் பங்கேற்ற தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.ஸ்ரீநேசன், இ.ஸ்ரீநாத் ஆகியோர் வலியுறுத்தினர்.

இதற்காகத் தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மாவட்டமட்டத்தில்அனைத்துதிணைக்கள அதிகாரிகளையும் இணைத்து கூட்டமொன்றை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# இலங்கை - இந்தியக் கடற்படையின் கூட்டு நடவடிக்கையால் 500 கிலோ போதைப்பொருள்களுடன் 9 இலங்கையர் கைது!

**(ந.லோகதயாளன்)**

இலங்கை - இந்தியக் கடற்படையின் கூட்டு நடவடிக்கையால் நடுக் கடலில் வைத்து 500 கிலோகிராம் போதைப் பொருள்களுடன் 9 இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச கடல் வழியாக இரண்டு படகுகளில் அதிகளவான போதைப் பொருள்கள் கடத்துவதான தகவலை யடுத்து இரு நாட்டு கடற்படையினரும் கூட்டிணைந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



இதன்போது இரு படகுகளில் 500 கிலோகிராம் மெத்தமன் ரக போதைப் பொருள்கள் கடத்தி வரப்பட்டபோது போதைப்பொருள்களுடன் 9 பேரும் நடுக் கடலில் வைத்து கைது செய் யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 9 பேரும் இலங் கையைச் சேர்ந்தவர்கள் என்ற வகை யிலும், கூட்டிணைந்த நடவடிக்கை என்பதனாலும் சந்தேகநபர்கள் கைப் பற்றப்பட்ட போதைப்பொருள்களுடன் இலங்கைக் கடற்படையினரிடம் ஒப் படைக்கப்பட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தேர்தல் பெறுபேற்றை...**

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின்போது அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த இலங்கைக் கான சீனத் தூதவர், தமிழ் மக்கள் தற்போ தைய அரசுடன் இணைந்து மாற்றத் துக்காகப் பயணிக்கின்றனர் எனவும், இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஒன்றிணைந்து பயணிப்பார்கள் எனவும் தெரிவித்த கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்கள் எந்தவொரு நாட்டினை யும் நட்பு நாடாகவோ அல்லது எதிரி நாடாகவோ பார்ப்பது கிடையாது.

இவ்வாறான நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சீனத் தூதுவர் தெரிவித்த கருத்து தொடர்பில் சில விளக்கத்தைத் தெரிவிக்கலாம் என நினைக்கின்றேன்.

தமிழ் மக்கள் வாழ்வியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதி யாகவும் தொடர்ந்து இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப் பட்ட தமிழ் மக்கள் விவகாரம், சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி இன்னும் கிடைக் கப் பெறவில்லை.

தமிழ் மக்கள் தமக்கு விளைக்கப் பட்ட அநீதிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கிப் பயணித்தவர் நிலையில் அதற்கான தீர்வு கிடைக்கப் பெற வேண்டும் என்ப தில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அண்மையில் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத் தைத் தீர்மானிக்க முடியாது. ஏனெனில் அதையும் தாண்டி பயணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

அண்மையில் தேசிய மக்கள் சக்தி யின் அமைச்சர் ஒருவர் காணாமல்போன வர்களை 15 வருடங்களாகக் காண வில்லை என்றால் காணவில்லைதான் என்ற கருத்துப்பட கருத்துத் தெரிவித்தி ருந்தார்.

அவருடைய கருத்தைப் பார்த்தால் 2009 இற்கு முன்னர் அவர்களுடைய கட்சி பலரைக் காணாமல் ஆக்கியது. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக இதை அவர் அவ்வாறு காணாமல்போனது காணா மல்போனதுதான் என்ற கருத்துப்படத் தெரிவித்திருக்கின்றார்.

ஆகவே, தமிழ் மக்கள் தமது தேசிய விடுதலைக்காகப் போராடி வரும் ஒரு இனமாகக் காணப்படுகின்ற நிலையில் அதனை வென்றெடுப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் எங்களால் முடிந்தவரை தொடர்ந்தும் பயணிப்போம்." - என்றார்.



# மருதங்கேணி பாலம் ஊடாக கனரக வாகனப் போக்குவரத்துக்குத் தடை!





மருதங்கேணி பாலம் ஊடாக கனரக வாகனப் போக்குவரத்துக்குத் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிலைமை காரணமாக மருதங்கேணி பாலத்தின் இரு புறங்களும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதனால் பாலத்தின் ஊடாக கனரக வாகனப் போக்குவரத்து தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

பாலம் மேலும் சேதமடையாத வகையில் பாலத்தின் இரு புறங்களிலும் தற்போது மண் மூடைகள் அணைக்கப்பட்டுள்ளன.

விரைவில் பாலம் புனரமைக்கப்பட்ட பின்னர் கனரக வாகனப் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்று யாழ். மாவட்ட செயலர் தெரிவித்துள்ளார்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மின்சாரம் தாக்கி...**

பகுதியில் நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் கணவன், மனைவி எனத் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இருவரும் 55 மற்றும் 52 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்த இருவரும் தங்கள் குடியிருப்புக்கு அருகில் வணிக வளாகம் நடத்தி வந்தனர். வணிக இடத்திற்குத் தனியாக மின்சாரம் பெறப்படவில்லை எனவும், கம்பியைப் பொருத்தி மின் எடுக்கப்பட்ட போது இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயரில் ஏற்பட்ட பழுதைச் சரி செய்யும் முயற்சியில் ஈடுபட்ட கணவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். அவரைக் காப்பாற்ற முயன்ற மனைவியும் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அருகில் வசிப்பவர்கள் இருவரையும் முந்தலம் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர்கள் ஏற்கனவே உயிரிழந்துவிட்டனர் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.



# மன்னார் சேத விவரம் தொடர்பில் விசேட ஒருங்கிணைப்புக் கூட்டம்

**67 ஆயிரத்து 928 பேர் பாதிப்பு; கால்நடைகள் மற்றும் விவசாய செய்கை பாதிப்பு குறித்தும் ஆராய்வு**

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை தொடர்பாகவும், ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் ஆராய்வதற்கான விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று வியாழக்கிழமை (28) மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

குறித்த கூட்டமானது மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன், ரிசாத் பதியுதீன் , காதர் மஸ்தான், ம.ஜெகதீஸ்வரன், து.ரவிகரன், செ.திலகநாதன், ப.சத்தியலிங்கம் மற்றும் பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் வலயக் கல்விப்பணிப்பாளர்கள்,பொலிஸார், கடற்படை, இராணுவத் தரப்பு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை பாதிப்புகள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி முதல் நேற்று 28 ஆம் திகதி வரை மன்னார் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் 3 இல் 2 பகுதி நீரில் மூழ்கியுள்ள நிலையில் தற்போது நீர் வெளியேறி வருகிறது. மன்னார் மாவட்டத்தில் இதுவரை 19 ஆயிரத்து 723 குடும்பங்களைச் சேர்ந்த 67 ஆயிரத்து 928 பேர் பாதிப்படைந்



துள்ளனர். 3210 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 263 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் 69 நலன் புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்டு வரும் அத்தியாவசிய உதவிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் தேங்கியுள்ள நீரை வெளியேற்றுவது குறித்தும், வெளியேற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதம், மற்றும் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

அவசர செலவினங்களுக்காக தற்போது 7 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளமை குறித்தும், சமைத்த உணவுகளை வழங்குதல் மற்றும் மேலதிகமாக தேவைப்படுகின்ற நிதி குறித்தும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்தும்,அந்த மக்களுக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான உலர் உணவுகளை வழங்குவது குறித்தும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அதற்கு அமைவாக 38 மில்லியன் ரூபா நிதிக்கான கோரிக்கை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அதற்கான கோரிக்கையும் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது.

இதன் போது வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களினாலும் உறுதியளிக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த கால போக பயிர்ச் செய்கை குறித்தும் அழிவுகள் குறித்தும் ஆராயப்பட்டது. இதன் போது 7 ஆயிரத்து 988 ஹெட்டயர் நிலப்பரப்பில் விவசாயம் முற்று முழுதாக அழிந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சேதத்தை கணிப்பிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறித்து குறித்த கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது. மேலும் அழிவுக்கான காப்புறுதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதை நெல்லை பெற்றுக் கொடுக்க நாடாளுமன்ற உறுப்பினர்களால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கால் நடைகளை தேத்தாவடி பகுதியில் மேய்ச்சலுக்கு விடுகின்றமை வழக்கம். இந்த நிலையில் இம்முறை விடப்பட்ட 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் தற்போது பெய்த கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாடுகளின் சேத விவரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றமை குறித்தும் தெரிவிக்கப்பட்டது. மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு உரிய மேய்ச்சல் தரவை இல்லாமை குறித்தும்,அதனால் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் குறித்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு உரிய தீர்வை வழங்க கோரிக்கை முன் வைக்கப்பட்டது.



## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# சீனத் தூதரின் அலப்பறை

சுதந்திர இலங்கையில் முதல் தடவையாக முழுமையாக இடதுசாரிப் போக்கும் சீனச் சார்பும் கொண்ட ஓர் அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்திருக்கிறது.

இந்தப் பிராந்தியத்தில் ஏற்கனவே இந்திய உபகண்டத்தோடு வல்லாதிக்க முரண்பாட்டு மோதலில்இழுபறிப்பட்டு வரும் அந்தத் தேசத்தின் அயல் நாடான சீனா, இங்கு இலங்கையிலும் தன்னுடைய மோதல் களத்துக்கான வாசலைத் திறந்திருப்பதாகத் தோன்றுகிறது.

சரியோ, பிழையோ இதுவரை காலமும் இருந்த கொழும்பு அரசுகள் தமது உடனடி அயல் தேசமான பாரதத்தின் இந்தப் பிராந்திய பங்களிப்பை - உரித்தை - முக்கியத்துவத்தை - உணர்ந்து அதற்கு ஏற்பவே - அதற்கு இசையவே - காரியமாற்றி வந்திருக்கின்றன. உடனடி அயல் தேசமான பாரதத்துக்கு நல்லுறவு விடயத்தில் முக்கியத்துவம் என்ற அடிப்படையில் இலங்கை தன்னுடைய சர்வதேச உறவாடலில் இந்தியாவுக்கு பிரதான பங்களிப்பு வழங்கி வந்தது. இப்போது ஆட்சி மாற்றத்தை அடுத்து, தனக்குச் சார்பான அரசு கொழும்பில் அதிகாரத்துக்கு வந்திருப்பதை வைத்துக் கொண்டு இப்பிராந்தியத்தில் செல்வாக்கு செலுத்தும் நோக்கில் மெல்ல அகலக் கால் பரப்ப விரும்புகின்றது சீனா.

அந்த நாட்டின் ராஜதந்திரிகள் இலங்கையில் இப்போது ஆரம்பித்திருக்கும் அலப்பறை - அதிகப்பிரசங்கித்தனமான கருத்து வெளிப்பாடு - அதைத்தான் நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இதுவரை காலமும் இலங்கையில் இந்தியாவுக்கு மிக நெருக்கமான வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அதிகம் சத்தம் சந்தடி இல்லாமல் - கமுக்கமாக - மாமுலான விஷயங்களை மேற்கொண்டு வந்த சீனத் தூதுவர், இப்போது அங்கு வந்து நின்று கொண்டு அதிகப்பிரசங்கித்தனமான சர்வதேச அரசியல் உபதேசங்களை நடத்தத் தொடங்கி இருக்கிறார்.

கொழும்பிலும் ஊடகவியலாளர்களை சந்தித்து பிராந்திய அரசியல் வகுப்பு எடுக்கிறார். கொழும்பு சுயாதீனமாக முடிவெடுத்து சர்வதேச விடயங்களைக் கையாள வேண்டும் என்று அவர் தத்துவம் உரைக்கின்றார்.

இலங்கை வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியாமல் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும், குறிப்பாக சில 'தரப்புகள்' இலங்கையின் பொருளாதார சூழ்நிலையை சாதகமாக்க முயற்சிக்கும் நேரத்தில், அதைத் துறந்து இலங்கை சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என நல்லுபதேசம் செய்கின்றார். அந்தக் கருத்துத்தான் உச்ச வேடிக்கையானது.

ஒரு விதத்தில் பார்த்தால் அது 'சாத்தான்வேதம்ஓதுவதற்கு'ஒப்பானதாகவே தோன்றுகின்றது.

இலங்கையில் 'வெள்ளை யானை' திட்டங்களுக்கு பெருமளவில் கடன்களை வாரி வழங்கி, சீனாவின் அந்தக் கடன்பொறிக்குள் சிக்கும் நெருக்கடியை இலங்கைக்குத் தந்து, அந்தக் கடன் நிலுவையைப் பிடியாக வைத்துக் கொண்டு இலங்கையை ஆட்டிப் படைக்கும் சீனா, வேறு சில தரப்புக்கள் அப்படி நடப்பதாக கயிறு விடுவது ஆச்சரியமானது.

சீனா இலங்கைக்கு கடன்களை வாரி வழங்கிய திட்டங்கள் பொருத்தமற்ற வெள்ளை யானை போன்றவை என்று பல தரப்பினரும் சுட்டிக்காட்டுகின்ற போது, அவை யாவும் இலங்கையின் வேண்டுகோளின் பேரில் வழங்கப்பட்ட கடன்கள் என்றும், அவற்றை எவ்வாறு இயக்குவது என்பதை இலங்கைதான் அறிந்திருக்க வேண்டும் என்றும் சீனத் தூதர் வியாக்கியானம் கூறுகிறார்.

பலனே கிட்டாத திட்டங்களில் இலங்கை பெருமளவு முதலீட்டை வாரிக்கொட்டி வீணாக்குவதற்கு கடனை வழங்கி தள்ளி, அதன் மூலன் இலங்கையை கடன் பொறுப்பில் சிக்க வைத்து விட்டு, இப்போது இலங்கை சுதந்திரமாகத் தன்னுடைய கொள்கைகளை வகுத்து செயல்பட வேண்டும் என்று சீனத் தூதுவர் ஆலோசனை கூறுவது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் வேலைதான்...!




## கேள்வி–பதில்

**கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்**

**கேள்வி: நாடாளுமன்றத் தொடக்க நிகழ்வில் கலந்து கொள்ள வந்த ஜனாதிபதி அநுர, தனது கார்க் கதவைத் தானே திறந்து கொண்டு இறங்கி வந்த எளிமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: மகிழ்ச்சி தந்தது. உயரத்தில் இருக்கின்றபோது காட்டுகின்ற எளிமைதான் எளிமை! அதனை அநுர புரிந்து கொண்டிருக்கிறார். 'சிஸ்ரத்தை' மாற்றப் போகிறார் என்பதற்கான அடையாளக் குறியீடுகளில் இச் சம்பவம் ஒன்றாகி



விட்டது. ஜனாதிபதியின் இச் செயல் நம் நாட்டிற்கு மட்டுமல்ல, அயல் நாடுகளுக்கும் முன்னுதாரணமாகி இருக்கிறது.

ஆனால் ஒன்று, இதுபோன்ற செயல்களால் நாட்டு மக்களின் உள்ளங்களைக் கவரலாமே தவிர, நாட்டினை உயர்த்த முடியாது. இப்போது அவரதும், அவரது அணியினரதும் முழுக் கவனமும் இரண்டாவது விடயத்தில்தான் பதிய வேண்டும். நாட்டை உயர்த்தி விட்டால் இத்தகைய நல்ல அடையாளங்களுக்கு மதிப்பு வரும். அதில் தவறிழைத்தால் இத்தகைய நன்னடத்தைகள் எல்லாங்கூட வெறும் கவர்ச்சிக் காரியங்களாகிவிடும்.

எதுவானாலும் இம் முயற்சி நல்ல முயற்சி. பாராட்டுவோம்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி: நாடாளுமன்றத் தொடக்க நிகழ்வில் கலந்து கொள்ள வந்த டாக்டர் அருச்சுனாவின் செயல்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: உங்கள் ஊரில் கத்தரிக்காய் விலை குறைந்து விட்டதா?....வேறு வேலை இருந்தால் பாருங்கள்....!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆



**கேள்வி: கட்சி, தலைமையைத் தந்தால், 'வடக்கிலும் கட்சியை வளர்த்தெடுப்பேன்' என்று சாணக்கியன் பேசி இருக்கிறாரே?**

பதில்: பல் உள்ளவன் முறுக்கைக் கடிப்பேன் என்கிறான். கடித்து விட்டுச் சொல்வதால் நம்பித்தான் ஆகவேண்டும்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி: 'இசைப்புயல்' ஏ.ஆர்.ரஹ்மான் பற்றிய செய்தி?**




பதில்: பொய்யாய்ப் பகல் கனவாய்ப் போகட்டும்!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி: என்ன? சுமந்திரனை இன்னும் சிலபேர் விடமாட்டார்கள் போலிருக்கிறதே?**

பதில்: அவர்களுக்கு இனத்தின் மீதோ, சுமந்திரன் மீதோ அக்கறை இல்லை. தம்மை அடையாளப்படுத்தும் முயற்சியாய் சுமந்திரனைத் திட்டிப் பார்க்கிறார்கள். எல்லாரும் சொல்லுகிற சூரியன் – நாய் பழமொழியை நானும் சொல்ல விரும்பவில்லை.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**கேள்வி: சுமந்திரனை இவ்வளவு பாராட்டுகிற நீங்கள், சிறீதரனைப் பற்றி ஏதும் சொல்லவதில்லையே. ஏன்? அவர் உங்கள் பகையாளியா?**

பதில்: உண்மையில் அவர்தான் என் நெருங்கிய நண்பர். புலிகள் காலத்தில் இருந்தே என் பேச்சுக்களை இரசிக்கும் மனிதர். கம்பன் விழா நிகழ்வுகள் ஒன்றையும் தவறவிடாதவர். தனது பதவியை வைத்துக் கழகத்தின் வளர்ச்சிக்குப் பல தரம் உதவி செய்திருக்கிறார். நான் மாறுபாடான கருத்துக்கள் சிலவற்றை எழுதினாலும், அதுபற்றிக் கவலைப்படாமல் இம்முறைகூட எனது பிறந்த நாளுக்கு வாழ்த்துச் சொன்னார்.



ஆற்றல் உள்ள சுமந்திரனை, நம்மவர்கள் அநியாயமாய் வீழ்த்தியது பற்றி நான் பெரிதும் கவலை கொண்டிருக்கிறேன். பிரபாகரனும், சுமந்திரனும் தோற்றவர்கள் அல்லர். தோற்கடிக்கப்பட்டவர்கள். அத் தோல்வியால் சுமந்திரன் சோர்வுற்று விடக்கூடாது என்பதற்காகவே அவரை அதிகம் பாராட்டி எழுதுகிறேன். வென்றவர்க்கு எதற்குப் பாராட்டு? வெற்றியே பாராட்டு அல்லவா?

ஆனால் ஒன்று, சிறீதரனின் சில செயல்களால் நான் மன வருத்தமுற்றிருக்கிறேன். அதுபற்றி அவரோடு நேரில்தான் பேசவேண்டும். நிறைகள் பற்றிப் பொதுவில் பாராட்டலாம். குறைகள் பற்றித் தனியே சொல்வதுதான் நாகரிகம். சந்திப்புக்காய்க் காத்திருக்கிறேன்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி: ஈழத் தமிழர்களுக்கு மழையும் எதிரியா?**

பதில்: ஒருநாளும் இல்லை. மழை ஒருவருக்கும் எதிரியாவது இல்லை. ஈழத் தமிழர்களுக்கான எதிரிகள் நம் மண்ணிலேயே நிறையப்பேர் இருக்கிறார்கள். விண்ணிலிருந்து தனியே வரவேண்டுமா என்ன?

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி: ஜனாதிபதி, 'முக்கியமான நேரத்தில் நாடாளுமன்றத்துக்குள் நீங்கள் வராதமை பெரிய இழப்பாய்ப் போயிற்று' என்று தொலைபேசியில் சுமந்திரனிடம் வருந்தினாராமே?**



பதில்: யார் தேவை என்று அவர்களுக்குத் தெரிகிறது. நம்மவர்களுக்குத் தான் தெரியவில்லை. அதனால்தான் அந்த இனம் வளர நாம் தேய்கிறோம்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆



**கேள்வி: நாடாளுமன்றத்தின் முதல் நாள் அமர்வில் 'கெத்து'க் காட்டிய அருச்சுனா, கடைசியில் பகிரங்க மன்னிப்புக் கேட்டிருக்கிறாரே? அவரது ஆதரவாளர்கள் இதனையும் பாராட்டுவார்களோ?**

பதில்: தாங்களாய்க் கெடுகிறவர்கள் என்று சில பேர் இருக்கிறார்கள். மற்றவர்களால் கெடுக்கப்படுகிறவர்கள் என்று சிலபேர் இருக்கிறார்கள். அருச்சுனா இரண்டாவது வகையிலும் சேர்வார். மன்னிப்புப் பற்றியா கேட்டீர்கள்? 'எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்கிறார் வள்ளுவர். இதற்குமேல் நான் என்ன சொல்ல? (பேச்சு விழாமல் வள்ளுவரைக் கடவுள் காப்பாற்றுவாராக!)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி: இந் நாட்டின் தமிழ், சமய அறிஞரெல்லாம் தாமுண்டு, தம் வேலை உண்டு என்று பேசாமல் இருக்கிறார்கள். நீங்களும் அப்படி இருந்து நல்ல பெயர் வாங்குவதைவிட்டு, சமூக விடயங்கள் பற்றி எல்லாம் பேசி பலரிடமும் ஏன் திட்டு வாங்குகிறீர்கள்?**

பதில்: அவர்கள் உலகைத் திருப்தி செய்கிறார்கள். நான் தர்மத்தைத் திருப்தி செய்கிறேன். உலகத்தவரது பாராட்டாலும், திட்டாலும் எனக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. 'உண்மைகளைத் துணிந்து உரைக்க, தமிழ், சமய உலகில் ஒருவராவது இருந்தாரே!' என வருங்காலம் சொன்னால் எனக்கு அதுவே போதுமானது. இவர்கள் திட்டினாலும் நிச்சயம் இறைவன் என்னை அங்கீகரிப்பான்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**கேள்வி: இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின். நெதன்யாகுவிற்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 'பிடிவாரண்ட்' பிறப்பித்திருப்பது பற்றி?**



பதில்: அதனால் ஒன்றும் நடக்கப் போவதில்லை. அமெரிக்கா நிழல் செய்யும் வரைக்கும் இஸ்ரேலை யாராலும் எதுவும் செய்யமுடியாது. நீதி நிலை நாட்டப்படாவிட்டாலும் அதனை உரைக்கவாவது உலகில் ஓர் அமைப்பு இருக்கிறதேயெனச் சந்தோஷப்படவேண்டியதுதான்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆



# ஒலுவில் அல் ஹம்றா மாணவர்கள் தேசிய மட்ட தடகள போட்டியில் வெற்றி

(எஸ்.அஷ்ரப்கான்)

மாத்தறையில் நடைபெற்ற "ஸ்ரீ லங்கா ஸ்கூல் அத்லடிக் அசோசியேசன் சேர் ஜோன் டாபட் ஜூனியர் சம்பியன்ஸிப் -2024" தேசிய மட்டப் போட்டித் தொடரில் ஒலுவில் அல்-ஹம்றா பாடசாலையின் மாணவர்கள் வெற்றி பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

நீளம் பாய்தல் போட்டியில் யூ.அப்துல்லா, மர்றை ஹான், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் யூ.அப்துல்லா, 400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் யூ.அப்துல்லா, எம்.ஆர்.ஏ.எச் றைஹான், என்.எம்.நுஸைக், எம்.எப்.அல்ஸாம் மசாரிப் ஆகிய மாணவர்கள் வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற நெறிப்படுத்தலை இணைப்பாடவிதானத்துக்குப் பொறுப்பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீன் அனுமதி ஒத்துழைப்பை வழங்கிய கல்லூரியின் அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம், இந்த மாணவர்களைப் பயிற்றுவித்த பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.அஸ்மத் சஹி, விளையாட்டு ஆசிரியர் ஆர்.நௌஸாத், பாடசாலையின் கெடட் பிரிவுக்கு பொறுப்பான ஆசிரியர் லெப்டினன் ஏ.எம்.எம்.கியாஸ் மற்றும் பாடசாலையின் பிரதி , உதவி அதிபர்களுக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்துள்ளது.







# பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விழிப்புணர்வு

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமும் தெல்லிப்பழை பிரதேச செயலகமும் வலி. வடக்கு இளைஞர் வளவாளர் நிலையமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வை முன்னெடுத்தன. இதன்போது மல்லாகம் மகா வித்தியாலயம் மற்றும் ஏழாலை மகா வித்தியாலய மாணவர்களுக்குப் போதைப் பொருள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்வில் வளவாளராக பிரேம்ராஜா கலந்துகொண்டிருந்தார்.



# பெருவெள்ளம் உடைத்த நீர்க்குழாய்; திருத்த வேலை தொடர்பில் ஆராய்வு!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் உடைக்கப்பட்ட பாரிய நீர்க்குழாய் இருக்கும் இடத்துக்கு இன்று (29) வெள்ளிக்கிழமை பகல் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளர்கள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் சென்றனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் வினாயகமூர்த்தி , இயக்கமும் பராமரிப்பும் பிரிவிற்கான பொறியியலாளர் பாக்கியராஜா மயூரதன் மற்றும் காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி பொறியியலாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் ஆகியோர் அங்கு சென்று நிலைமையை ஆராய்ந்தனர். இன்று காலநிலை ஓரளவு சீராக இருந்ததால் அங்கு செல்ல முடிந்தது.



உடனடியாக திருத்த வேலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையிட்டு அவர்கள் ஆராய்ந்தனர்.

முதற்கட்டமாக திருத்த வேலைக்கான உபகரணங்கள் மற்றும் தொழிலாளர்களை கொண்டு வருவதற்கான வாகனப் பாதை தற்போது செப்பனிடப்பட்டு வருகிறது.

பெரும்பாலும் நாளை (30) சனிக்கிழமை மாலை திருத்த வேலைகள் பூர்த்தியடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாறையில் இருந்து நிந்தவூர் பிரதான நீர்த்தாங்கிக்கு நீரை எடுத்து வரும் பாரிய குழாய் உடைந்திருப்பதன் காரணமாக கடந்த மூன்று நாள்களாக கரையோரத்தில் குறிப்பாக நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களுக்கான குழாய்நீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டிருந்தது. மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டிருந்தனர்.

450 மில்லி மீற்றர் விட்டம் உள்ள சுமார் 20 மீற்றர் நீளமான இந்தப் பாரிய குழாய் பெரு வெள்ளத்தில் அள்ளுண்டதால் இத்திடீர்த் தடை ஏற்பட்டது.





# கல்முனை கிட்டங்கி பாலத்தில் ஒருவரது சடலம் இன்று மீட்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கிட்டங்கி பாலத்தில் நீரில் மூழ்கி கரை ஒதுங்கிய நிலையில் ஒரு வருடைய சடலம் இன்று (29) மீட்கப் பட்டது.

கல்முனை - பாண்டிருபை வசிப் பிடமாகக் கொண்ட 47 வயதுடைய ஜெகன் என அழைக்கப்படும் நாக லிங்கம் சுரேஷ் என்பவரது சடலமே இவ்வாறு கரை ஒதுங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

நாவிதன்வெளி - சவளக்கடை மரம் அரியும் ஆலயம் ஒன்றில் வேலை பார்க்கும் இவர் கடந்த இரண்டு தினங் களுக்கு முன்னர் காணாமல் போயி ருந்தார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இன்று காலை (29) திரவந்தியமேட்டு பகுதியில் பாதிக் கப்பட்டுள்ள மக்களுக்கு உணவுகளை எடுத்துச் சென்ற கடற்படையினர் குறித்த பகுதியில் சடலம் மிதப்பதை கண்டு அதைக் கரை சேர்த்துள்ளனர்.

சடலம் மேலதிக விசாரணைகளுக் காக அங்கிருந்து கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டது. இதேவேளை, மூன்றாவது நாளாகவும் நாவிதன்வெளி கல்முனை கிட்டங்கி பாலத்தின் உடன போக்கு வரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அத்தியா வசிய தேவைகளை மாத்திரம் கருதிக் கொண்டு கடல் படையினரின் படகு சேவை இடம் பெற்று வருகின்றன.



# நுவரெலியாவில் மழையால் ஆயிரத்து 297 பேர் பாதிப்பு

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இன்று (29) காலை நிலவரப்படி 344 குடும் பங்களைச் சேர்ந்த 1297 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக 204 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள் ளதுடன் 117 குடும்பங்களைச் சேர்ந்த 462 பேர் 9 முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்தார்.

நுவரெலியாஇ கந்தபளை கோட் லோட்ஜ் தோட்டத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக 32 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேர் குறித்த தோட்டத்தில் சமர்ஹில் பாடசாலையில் அமைத்துள்ள பாதுகாப்பான முகாமில் தங்கியுள்ளனர்.

கந்தபளை கொங்கோடியா தோட்டத் தில் மண்சரிவு அபாயம் காரணமாக 14 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேர் ஆலயத்தில் உள்ள பாதுகாப்பான முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வலப்பனை குருதுஓயா அல்மா பாலர் பாடசாலையில் 21 குடும்பங்க ளைச் சேர்ந்த 60 பேர் தங்கியுள்ளனர்.

கொத்மலை டன்சினன் கொரெஞ்சி பாடசாலையில் உள்ள பாதுகாப்பான முகாமில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் தங்கியுள்ளனர்.

ஹங்குராங்கெத்த திகலஹின்ன சனசமூக மண்டபம் மற்றும் ஹோப் மத்திய பிரிவு தோட்டக் கட்டிடத்தில் 02 பாதுகாப்பான முகாம்களும் திகல ஹின்ன சனசமூக மண்டபத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 03 பேரும் ஹோப் மத்தியபிரிவு தோட்டக் கட்டிடத் தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 08 பேரும் தங்கியுள்ளனர்.

தலவாக்கலை அக்கரப்பத்தனை போட்மோர் பாடசாலையில் அமைக்கப் பட்டுள்ள பாதுகாப்பு முகாமில் 08 குடும் பங்களை சேர்ந்த 34 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் பாதுகாப்பான முறையில் உணவு உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் நுவரெலியா கம்பளை பிரதான வீதியின் கெரண்டிஎல்லஇ லபுக்கலை மற்றும் ஏனைய பிரதேசங் களில் உள்ள பிரதான வீதிகளில் மண் சரிந்து வீழ்ந்த இடங்களிலிருந்தும் மண் அகற்றப்பட்டுள்ளது என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலை யம் தெரிவித்துள்ளது.





# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம சமைத்த உணவு!

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் தோப்பு மற்றும் குருநகர் தொடர்மாடி பகுதி மக்கள் 350 பேருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் சமைத்த உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் (27) வழங்கி வைக்கப்பட்டன.

இதனை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.









# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாவகச்சேரிப் பொலிஸாரின் உதவிகள்!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பொலிஸாரின் ஏற்பாட்டில் நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டப் பகுதியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கு நேற்று சமைத்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள் என.

இதன்போது 100 பேருக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






# சைவ மங்கையர் கழகத்தின் ஆரம்ப பள்ளிப் பட்டமளிப்பு

கொழும்பு சைவ மங்கையர் கழகத்தின் ஆரம்ப பள்ளி வருடம் தோறும் நடத்தும் பட்டமளிப்பு விழா கடந்த 24 ஆம் திகதி சைவ மங்கையர் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

ஆரம்ப பள்ளி மாணவர்களின் 3 ஆவது பட்டமளிப்பு விழாவாக இது அமைந்தது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக கழக தலைவர் செல்வி மாலா சபாரத்னம் கலந்து கொண்டார்.

இந்த வைபவம் சிறப்பாக நடப்பதற்கு உதவியாக இருந்த தலைமை ஆசிரியை திருமதி புகலோஜினி சிவதர்ஷனனுக்கும் ஏனைய ஆசிரியைகள் திருமதி பிரியா ஸ்டீவ் காந்த், டிலானி ரோஸ் ராஜேந்திரன், விஜயதர்ஷினி விஜய மோகன், ராதிகா கிருஷாந்த், புவனேஸ்வரி தியாகராஜா, நிவேஜா பஞ்சலிங்கம், பிரியதக்ஷினி பாஸ்கரன் ஆகியோருக்கும் மற்றும் பெற்றோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.











# மன்னார் வைத்தியசாலை பொருள்களை சேதப்படுத்தியோரை கைது செய்க!

## வைத்தியசாலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

((மன்னார் நிருபர் )

மன்னார் வைத்தியசாலையின் பொருள்களைச்சேதப்படுத்தியவர்களை இனங்கண்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வைத்தியசாலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மன்னார் மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் மற்றும் ஏனைய கூட்டு அமைப்பினரும் இணைந்து மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு எதிராக நடந்து வரும் தற்போதைய முரண் நிலைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளோம்.

மன்னார் மருத்துவமனை சமூகத்தினருக்கு எதிரான சமூக ஊட கங்களில் தேவையற்ற அவதூறான, இழிவான பதிவுகள் மற்றும் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் மருத்துவமனை வட்டாரத்தினராகிய நாம் உளரீதியாக பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளோம். இதற்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

அத்துடன் மன்னார் மக்களுக்கு சேவையாற்ற உறுதியான, பொறுப்பான, பொறிமுறை அமைப்பாக இயங்கி இந்தச் சிக்கல்களை சரி செய்வதற்கு நாங்கள் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

1. எமது நடைமுறைச் சிக்கல்களை வடமாகாண ஆளுநர் மற்றும் சுகாதார அமைச்சர் உட்பட உயர் அதிகாரிகளுக்கு உத்தியோக பூர்வமாக தெளிவான விளக்கங்களாக வழங்கியுள்ளோம்.

2. மருத்துவமனை சார் நடைமுறை சிக்கல்கள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து அவர்களுக்கும் உறுதியாக எடுத் துரைத்துள்ளோம். அவர்களது உறுதியான பங்களிப்பையும் ஆதரவையும் எதிர்காலத்தில் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

மதத் தலைவர்களைச் சந்தித்து நாம் சிக்கல்களை விளக்கியுள்ளோம். இதன் மூலம் மக்கள் விழிப்படைய வேண்டும் என்பதும் பொது மக்களுக்கும் மன்னார் மாவட்ட மருத்துவ சமூகத்தினருக்கும் இடையில் சுமூகமான புரிதல் ஒன்று கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

இருந்தபோதிலும், இதுவரை நாம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு தகுந்த நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. பொது மக்கள் உணர்வு ரீதியாக செயல்படுகிறார்களே அன்றி இந்த விடயத்தில் ஆழ்ந்து சிந்திக்கத்




தவறுகின்றமை எமக்கு மன வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

கடினமான சூழ்நிலைகளில் எல்லாம் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய எமது மருத்துவ சமூகத்தினர் இன்று சுமூகமாக பணியாற்ற முடியாத நிலையில் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இங்கு பணியாற்றும் அனைத்து மருத்துவர்களும் தங்கள் பணிக்கு அதிகரித்த பொறுப்புணர்வுடன் செயல்பட்டு வந்தவர்கள் என்பதை தெளிவாக குறிப்பிடுகின்றோம்.

இவர்களில் பெரும்பாலானோர் உள்ளகப் பயிற்சி முடிவடைந்த பின்னர் வழங்கப்படுகின்ற முதல் நியமனத்தில் பணியாற்றுவதற்கு அவாவுடன் வந்தவர்கள்.

இதனால் தமிழ் மொழி மூலமாக பிரதேச மக்களுடன் தொடர்பாடல்கள் சில காலம்வரை வரையறுக்க பட்டிருக்கும், மேலும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பணியாளர்களுடன் தற்காலிக நியமனத்தில் சேவையாற்றுகின்ற மற்றும் வேறு வைத்திய சாலைகளில் கடமையாற்றுகின்ற, சேவை தேவை நிமித்தம் வருகை தருகின்ற மருத்துவ நிபுணர்களுடன் பணியாற்றி வருகின்றனர்.

மேற்கூறப்பட்ட விடயங்களை கருத்தில் கொண்டு எங்கள் பெரும்பாலான உறுப்பினர்களின் ஒருமித்த முடிவுகளுக்கு அமைவாக பின்வரும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

1)குறிக்கப்பட்ட நேரங்களில் மாத்திரம் இயங்கும்.

மதிய உணவு இடைவேளையில் (12-02) வெளி நோயாளர் பிரிவில் அவசர சிகிச்சை நோயாளர்களை விடுதியில் அனுமதித்தல் தவிர்ந்த வழமையான சேவைகள் இடம்பெற மாட்டாது.

2) சிகிச்சை நேரம் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மற்றும் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மட்டுமே அமையும். இது தவிர்ந்த நேரங்களில் அவசர நோயாளர்கள் மாத்திரம் பார்வையிட படுவர்.

3)மருத்துவமனையின் ஊழியர்களுடன் இணைந்து வைத்தியசாலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அமைதியான போராட்டங்களில் எதிர்காலத்தில் ஈடுபடும்.

4) புதன்கிழமை காலை 8 முதல் அனைத்து வழக்கமான பணிகளையும் நிறுத்தி அவசர தேவைகளுக்கு மட்டுமே பணியாற்றுவோம்.

எங்களின் பின்வரும் கோரிக்கைகளுக்கு தகுந்த பதில் கிடைக்கும் வரை இது தொடரும்.

1. சீரான, திருப்தியான மருத்துவ சேவையினை வழங்குவதற்கு ஒரு பாதுகாப்பான சூழல் உறுதி செய்யப்பட வேண்டும்.

2. அரசியல் மயப்படுத்தப்பட்ட, மக்கள் சேவை விரோத, சட்டவிரோத செயற்பாடுகள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.மருத்துவமனை பொருள்களைச் சேதப்படுத்தியவர்கள் அடையாளம் கண்டு கைது செய்து அவர்களுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, பழுதுகளை சரி செய்வதற்கான செலவினத்தையும் அவர்களே பொறுப்பேற்றல் வேண்டும்.

4. வைத்தியசாலை வளாகத்தில' உள்ளும், சிகிச்சை வழங்கும் இடங்களிலும் நோயாளர்களையும், சேவை வழங்குனர்களையும் அனுமதியின்றி படம் எடுத்தல் முற்றாக தடை செய்யப்பட வேண்டும். இதை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. மருத்துவ சேவை தொடர்பான முறைப்பாடுகள் மருத்துவமனை நிர்வாகத்தின் ஊடாக அல்லது, பிராந்தியம், மாகாண மட்ட மேலதிகாரிகளுக்கு ஊடாக தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பது இறுக்கமாக வலியுறுத்தப்படுவதுடன், சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6.மருத்துவமனையில் இருந்து பயன்பெறுகின்ற மக்களின் தவறான புரிதல்களை சரி செய்ய உயர் அதிகாரிகள்மற்றும் சமூகத் தலைவர்களது செய்திக் குறிப்புகள் ஊடகங்களில் காலதாமதம் இன்றி வெளியிடப்பட வேண்டும்.

இறுதியாக நாம் கூற விளைவது யாதெனில்,

மன்னார் மக்களின் ஆரோக்கியம் மற்றும் நலனில் பெரிதும் அக்கறை கொண்டவர்கள் நாம். ஆனால் எதிர்பாராத சில சந்தர்ப்பங்களில் பொது மக்களும், சமூக ஊடகங்களும் பொறுப்பற்ற விதத்தில் உணர்வு ரீதியாகவும் செயல்பட விளைவதால் நாம் பெரிதும் இன்னலுக்கு ஆளாகி உள்ளோம்.

எத்தனையோ உயிர்களை இதுவரை காலமும் காப்பாற்றிய மருத்துவமனை மீது தாங்கள் நடந்து கொண்ட விதம் பெரிதும் வேதனை அளிக்கிறது. பொது மக்கள் இவ்விடங்களில் விழிப்படைய வேண்டும்.- என்றுள்ளது.



# அநுர அரசில் போதைவஸ்துக்கு முற்றுப்புள்ளி...?

● கலாபூஷணம் பரீட் இக்பால்.

அண்மையில் 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய 200 கிலோ கிராமுக்கும் அதிகளவான ஐஸ் போதைப் பொருளும் 70 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் காலி மாபலகம பிரதேசத்தில் கைப்பற்றப்பட்டது. மேலும் போதை வஸ்து வேட்டை தொடர்கிறது.

குடும்ப வாழ்வை சீரழிக்கும் நாட்டை குட்டிச்சுவராக்கும் போதைவஸ்து பாவனையை வேரோடு களைய அநுர அரசு தயாராகிவிட்டது. இதற்காக போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபையினர், போதைவஸ்து கடத்தல், விற்பனை, பாவித்தல் போன்றவைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க தயாராகிவிட்டனர். மேலும் போதைவஸ்து வேட்டை தொடர்கிறது. இது பாராட்டப்பட வேண்டிய வேண்டிய விடயமாகும்.

நாம் ஒவ்வொருவரும் போதைப் பொருள் கட்டுப் பாட்டுச் சபைக்கு ஒத்துழைப்பாக இருப்பது அவசியம். போதைவஸ்து பாவிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள், நாட்டுக்குள் கடத்தி வருபவர்கள் யாராக இருந்தாலும் எமக்கு தெரிந்திருக்கும் பட்சத்தில் போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையினருக்கு தெரிவிப்பது நாம் எமது நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் செய்யும் பேருதவியாகும்.

போதைப் பொருள்கள் பண்டைக்காலம் முதல் பாவனையில் இருந்து வந்துள்ளன. அபின், கஞ்சா, கள்ளு, சாராயம், கசிப்பு, பீடி, சிகரெட், சுருட்டு என்பன மக்களால் பாவிக்கப்பட்டு வந்தன. விஞ்ஞான வளர்ச்சி காரணமாக பண்டைக்கால போதைவஸ்துக்கள் நவீன உருவிலும் இலகுவான தன்மையிலும் தயாரிக்கப் பட்டுள்ளன. மிகச் சிறியளவு போதைவஸ்தை பாவிப் பதன் மூலம் அதிகளவு போதை தரக் கூடியதாக தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக பத்து கிராம் ஹெரோயினை சுமார் 2500 பேர் வரையில் பாவித்து போதை ஏற்றிக் கொள்ள முடியும். மேலும் இக்காலத்து போதைவஸ்துக்கள் இலகுவாக கடத்தவும் பரிமாற்றம் செய்யவும் வாய்ப்பாக அமைந்துள்ளன.

நவீன உலகில் பண்டைக் காலத்து போதைவஸ் துக்கள் மாதிரி அல்லாது மேற்கத்தேய நாடுகளால் ஹெரோயின், கொகேய்ன், கோடீன், மோர்பீன், கனபிஸ், மர்ஜுவானா, ஹஸீஸ், ஐஸ், கஞ்சா கலந்த போதைவஸ்து போன்ற நவீன போதைவஸ்துக்களும் மற்றும் மாத்திரை வடிவில் தயாரிக்கப்படும் எல்.எஸ்.டி. தூக்க மாத்திரைகளும் சர்வதேச ரீதியில் பல நாடுகளுக்கும் கடத்தப்படுகின்றன. உலகில் சில நாடுகளின் பொருளாதாரம் போதைவஸ்துக்கள் வர்த்தகத்திலே தங்கியுள்ளது. குறிப்பாக பெரு, வெனிசூலா, கொலம்பியா ஆகிய லத்தீன் அமெரிக்க நாடுகளை குறிப்பிடலாம்.

தீவிர போதைவஸ்து பாவனையாளர்களிடையே ஊசி மூலம் போதை பொருளை உடலில் செலுத்திக் கொள்ளும் பழக்கமும் உள்ளது. இத்தகைய போதை வஸ்து பாவனையாளர்களிடையே இலகுவாக எய்ட்ஸ் வைரஸ் தொற்றிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. அமெரிக்காவில் எய்ட்ஸ் நோயாளர்களில் 26 சதவீதமானோர் இத்தகையவர்களே என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இளைஞர்கள் குறுக்கு வழியில் இன்பம் அனுபவிக்க போதைப் பொருள்களை உட்கொள்கின்றனர். இலங்கையில் தற்போது லட்சக்கணக்கானோர் போதைவஸ்துக்கு அடிமையாக உள்ளனர் என்று ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

போதைவஸ்து பாவனை உலகை நீண்டகாலமாக அச்சுறுத்தி வருகின்றது. இவற்றைப் பாவிப்பதால் மக்கள் பல்வேறு நோய்களுக்கு உட்படுவதோடு தனது குடும்பத்துக்கு கெட்ட பெயர் உண்டாக்குவதும் பிறருக்கு தீங்கு விளைவிப்பவராகவும் மாறுகின்றனர்.

இலங்கையின் திறந்த பொருளாதார கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை என்பனவற்றால் நவீன போதைவஸ்துக்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன. இலங்கையை பொறுத்தவரையில் நவீன போதைவஸ்துக்கள் 1980 ஆம் ஆண்டளவில் பரவத் தொடங்கியது. இலங்கையில் முதலாவது ஹெரோயின் விற்பனையாளர் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி 270 கிராம் ஹெரோயினுடன் களுத்துறை மாவட்டத்திலுள்ள ஒரு ஊரில் கைது செய்யப்பட்டார். போதைவஸ்து பொருள்கள் பாவிப்பது, கடத்துவது, வைத்திருப்பது போன்றவற்றுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அநேகமான நாடுகளில் இவற்றுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இலங்கையிலும் போதைவஸ்து கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு உடனடி மரண தண்டனை அளிப்பதன் மூலமே போதைவஸ்து பாவிப்பதால் ஏற்படும் தீங்குகளில் இருந்து எமது நாட்டு சமுதாயத்தை பாதுகாக்க முடியும்.

குடும்ப வாழ்வை சீரழிக்கும் நாட்டை குட்டிச் சுவராக்கும் போதைவஸ்து பாவனையை வேரோடு களைய ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுதல்

தொடர்ச்சி ▼

# அநுர அரசில் போதைவஸ்துக்கு முற்றுப்புள்ளி...?

**தொடர்ச்சி▲**

அவசியம். இதற்காக போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் அக்கறையுடன் செயற்படுகிறது. நாம் ஒவ்வொருவரும் போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஒத்துழைப்பு நல்குதல் அவசியம். போதை வஸ்து பாவிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள், நாட்டுக்குள் கடத்தி வருபவர்கள் யாராக இருந்தாலும் எமக்குத் தெரிந்திருக்கும் பட்சத்தில் போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபைக்கு தெரிவிப்பது நாம் எமது நாட்டுக்கும் எமது சமுதாயத்துக்கும் செய்யும் பேருதவியாகும்.

'போதைவஸ்து பாவனைக்கு அடிமையானோரை அதிலிருந்து மீட்டெடுப்பது, புதிதாக போதைவஸ்து பாவனைக்கு அடிமைப்படாமல் இளம் சந்ததியினரை பாதுகாப்பது' என்ற இலக்கிலேயே அரசு பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை பாராட்டத்தக்கது. அதேநேரம் இன்று இலங்கையில் போதைவஸ்து பாவிப்பது, விற்பனை செய்வது, நாட்டுக்குள் கொண்டு வருவது ஆகிய நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பொறுத்தவரையில் தண்டனை திருப்திகரமாக இல்லை. இலங்கையில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் திடீர் திடீர் சுற்றிவளைப்புகள் இடம்பெறுகின்றன. பல ஆயிரம் கிலோ கஞ்சா, ஹெரோயின் போதைவஸ்துக்கள் கைப்பற்றப்பட்டு தீயிட்டு கொளுத்தப்படுகின்றன. இவ்வாறு அக்கறையுடன் செயற்படுவது பாராட்டத்தக்கது.

போதைவஸ்து பாவனையை இல்லாதொழிக்க சில நாடுகளால் போதை குறைந்த சில பொருள்களை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போதைவஸ்து பாவனையை போதைப் பொருளை வைத்தே தடுக்க முயற்சிப்பது முறையான தீர்வல்ல என சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

போதைவஸ்து பாவனையானது பொதுவாக சிறுவர் பராயத்தில் ஏற்பட்டுவிடுவதாக சில அறிக்கைகள் குறிப்பிடுகின்றது. பாடசாலைக் காலத்தில் தீய நண்பர்களின் சகவாசம் காரணமாக இது ஏற்படுவதாக கூறப்படுகின்றது. உதாரணமாக பாடசாலையில் ஆறாம் ஆண்டு மாணவர்கள் ஆறாம் ஆண்டு மாணவர்களுடனேயே பழகுதல் வேண்டும். ஏழாம் ஆண்டு மாணவர்கள் ஏழாம் ஆண்டு மானவர்களுடனேயே பழக வேண்டும். வித்தியாசமாக வேறு ஆண்டு மாணவர்களுடன் நண்பர்களாக பழகுவது நல்லதல்ல என்று மேற்கத்தேய பேராசிரியர் ஒருவர் தெரிவிக்கிறார். அப்படிப் பழகும்போதுதான் கெட்ட விடயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

இந்த விடயத்தில் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் சக ஆண்டு மாணவர்களுடன் பழகுகிறார்களா அல்லது ஆண்டு கூடிய மாணவர்களுடன் பழகுகிறார்களா என்பதை அவதானிக்க வேண்டும். பாடசாலைப் பருவத்தில் தீய நண்பர்களின் சகவாசம் காரணமாக ஆரம்பத்தில் புகை பிடித்தலில் இருந்து போதைவஸ்து பாவனை வரை வளர்வதாக கூறப்படுகிறது.

பெற்றோர்கள் இவ்விடயத்தில் தமது பிள்ளைகள் புகை பிடித்தல், மது அருந்துதல், போதைவஸ்துக்கு அடிமையாகுதல் போன்ற விடயத்தில் தொடர்பில் இருக்கிறார்களா என்பதை அவதானித்துக் கொண்டே இருக்க வேண்டும். கெட்ட பழக்கங்களை முளையிலேயே கிள்ளி விடுவது இலகுவான காரியமாகும். பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் மீது மிகுந்த அவதானம் இருப்பின் இவ்வாறான கெட்ட விடயங்களில் இருந்து தங்களது பிள்ளைகளை காப்பாற்ற முடியும். பெற்றோர்கள் அளவுக்கு அதிகமாகச் சுதந்திரமும் பணமும் அளிப்பதன் மூலமே பிள்ளைகள் கெடுவதற்கு வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது. எனவே பெற்றோர்கள் பிள்ளைகள் மீது மிகுந்த கவனம் செலுத்துதல் மூலம் இவ்வாறான கெட்ட செயல்களில் இருந்து பிள்ளைகளை நாட்டின் நற்பிரஜைகளாக உருவாக்க முடியும்.

போதைவஸ்து பாவனை இன்று புதிய வடிவத்தில்



மாணவர்கள் மத்தியில் பரவி வருவதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது சில மருந்து வகைகளை மாணவர்கள் போதைக்காக பயன்படுத்தி வருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போதைவஸ்துக்களை பெற்றுக்கொள்வதை விட மருந்து வகைகளை பெற்றுக்கொள்வது எளிதானது என்பதனால் இதன் மூலம் போதையை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். மருத்துவர்களால் மனநலம் குன்றிய நோயாளர்களுக்கு பரிந்துரைக்கும் மருந்தை போதைப்பொருள் பாவனையாளர்கள் அதிகமான அளவில் பாவிப்பது அதிகரித்திருப்பதாக கூறப்படுகிறது. எனவே பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் மேற்படி மருந்து வகைகள் அதிகமாக பயன்படுத்துகிறார்களா என்றும் அவதானிக்க வேண்டும்.

தங்களது பிள்ளைகளிடத்தில் தன்னம்பிக்கை குறைதல், படிப்பில் ஆர்வம் குறைதல், விளையாட்டுக்களில் ஆர்வம் குறைதல், சோம்பல், சற்று ஆர்வம் குறைந்த தோற்றம், பெற்றோரிடம் வாக்குவாதம் செய்வது, ஆசிரியரிடம் அதிக வாக்குவாதம் செய்வது காணப்பட்டால் பெற்றோர்கள் கூடிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் மருந்துகளேயாயினும் அளவுக்கு மீறி எடுத்துக்கொள்வது ஆபத்தில் முடியும் என்பதை பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் விளக்கமளிக்க வேண்டும்.

தங்களது பிள்ளைகள் யாராவது போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி இருப்பது தெரிந்தால் உடனடியாக மருத்துவமனை, போதைப் பொருள்கள் அடிமைத்தனத்தை போக்கும் இடங்களுக்கு அழைத்துச் சென்று தீவிர சிகிச்சை அளிப்பது முக்கியமானதும் அவசியமானதுமான விடயமாகும்.

போதைவஸ்து பாவனையை முற்றாக ஒழிப்பதற்கு முதலாவது அரசாங்கம் போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கு உடனடி மரண தண்டனை அளிக்க வேண்டும். இரண்டாவது, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைத் தீய நண்பர்களின் சகவாசத்தில் இருந்து பாதுகாத்து அவதானத்துடன் வளர்த்தெடுக்க வேண்டும்.

# பாம்பன் பாலத்தின் தரத்தை உறுதி செய்த பின்பே திறக்க வேண்டும்: ரயில்வே அமைச்சருக்கு கடிதம்



பாம்பன் புதிய ரயில் பாலம் தரம் குறைவாக இருப்பதாக இந்திய ரயில்வேக்கு தெற்கு ரயில்வே அதிகாரி சவுத்ரி ஆய்வு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில் பாம்பன் ரயில் பாலத்தின் தரத்தை உறுதி செய்த பின்னரே அதை திறந்திட வேண்டும் என இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் எம்பியான கே.நவாஸ் கனி, மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு கடிதம் எழுதி உள்ளார்.

இதுகுறித்து அந்த கடிதத்தில், “இராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் கட்டப்பட்டுள்ள புதிய ரயில்வே மேம் பாலத்தில் கடல் அரிப்பு பிரச்சினையை தீர்க்க முழுமையான நடவடிக்கை இல்லை. தூண்களில் தற்போதே அரிப்பு ஏற்பட தொடங்கியுள்ளதாகவும், புதிய பாலத்தில் சோதனை ஓட்டத்தில் தண்டவாளத்தில் அதிக ஒலி ஏற்படுவதாகவும் புகார் எழுந்துள்ளது.

எனவே, புதிய பாலத்தில் உள்ள குறைகளை மறுஆய்வு செய்து சரி செய்ய வேண்டும் என்று இந்திய ரயில்வேக்கு தெற்கு ரயில்வே அதிகாரி சவுத்ரி ஆய்வு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இந்த பாலத்தின் பணிகள் முடிவடைந்து சோதனை ஓட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில், விரைவில் திறக்கப்பட இருப்பதாக செய்திகள் வெளியாகி கொண்டிருக்கின்றன.

இச்சூழலில் ஒரு ரயில்வே அதிகாரியே இதுபோன்ற எச்சரிக்கையுடன் இந்த ஆய்வறிக்கையை சமர்ப்பித்துள்ளார். இது பொது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, முழுமையான பாதுகாப்பை உறுதி செய்வது அவசியமாகிறது. இதற்காக, பாம்பன் புதிய ரயில் பாலத்தின் தரத்தை முழுமையாக உறுதி செய்த பின்னரே பாலத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். பாலத்தின் தரத்தை மறுஆய்வு செய்து குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும். இந்த பாலத்தை விரைந்து பயன்பாட்டுக்கு கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்று குறிப்பிட்டுள்ளார்.

# உலகம் முழுவதும் ஒளிரும் இந்தியாவின் கலாச்சாரம்

## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



உலகம் முழுவதும் இந்திய கலாச்சாரம் ஒளிர்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் பிரதமர் மோடி உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு உள்ளார். அவர் அண்மையில் பயணம் மேற்கொண்ட நாடுகளின் காணொலி தொகுப்பு பிரதமரின் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

அதில், ஆஸ்திரியாவில் வந்தே மாதரம் பாடல், போலந்து, ரஷ்யா, பூட்டானில் கர்பா நடனம், பூடானில் இந்திய கலாச்சார நடனம், சிங்கப்பூரில் பரத நாட்டியம், லாவோஸில் ராமாயணம் அரங்கேற்றம், பிரேஸிலில் சம்ஸ்கிருத வேத மந்திரங்கள், ராமாயணம் அரங்கேற்றம் உள்ளிட்டவை தொடர்பான காணொலிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த இந்த காணொலிகளுடன் பிரதமர் மோடி வெளியிட்ட பதிவில், “உலகம் முழுவதும் இந்திய கலாச்சாரம் ஒளிர்கிறது. நான் செல்லும் இடமெல்லாமல் நமது நாட்டின் வரலாறு, கலாச்சாரம் செழித்தோங்கி இருப்பதை பார்க்க பூரிப்பாக இருக்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# உதயநிதியின் பிறந்த நாளுக்கு கிடைத்த 5 ஆயிரம் புத்தகங்கள்



தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி அவருக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் புத்தகங்களை நூலகங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது பிறந்தநாளை நேற்று முன்தினம் கொண்டாடினார். இதையொட்டி அவர் வெளியிட்ட அறிக்கையில், வாழ்த்து தெரிவிக்க வருபவர்கள் பூங்கொத்து, சால்வைக்கு பதிலாக புத்தகங்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அந்தவகையில் சுமார் 5 ஆயிரம் புத்தகங்கள் பிறந்தநாளன்று அவருக்கு வழங்கப்பட்டன. அவை அனைத்தும் தி.மு.க. இளைஞரணியின் தலைமை அலுவலகமான அன்பகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அங்கிருந்து ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதியிலும் உள்ள நூலகத்துக்கு புத்தகங்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளன.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில்,

“எனக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்த்துகளை பெற்று புத்துணர்ச்சியோடும், பெரும் ஊக்கத்தோடும் புதிய ஆண்டை தொடங்குகிறேன். என் பிறந்தநாளில் மிகப்பெரிய பரிசாக நான் கருதுவது, 2026 சட்டப்பேரவை தேர்தலில் 200 இற்கும் அதிகமான இடங்களில் வெல்ல வேண்டும் என்ற முதல்வரின் லட்சியதை நிறைவேற்றுவதாகத்தான் இருக்கும்.” என குறிப்பிட்டுள்ளார்.




# ஹெஸ்புல்லாவுடனான போர் நிறுத்தம் மீறப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவிப்பு

ஹெஸ்புல்லாவுடனான போர் நிறுத்தம் மீறப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

தெற்கு லெபனானின் ஆறு பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக லெபனானின் பாதுகாப்பு தரப்பு தெரிவித்த சில மணிநேரங்களில் இஸ்ரேல் இந்த அறிவிப்பை விடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலுக்கும் லெபனானின் ஆயுதக் குழுவான ஹெஸ்புல்லாவுக்கும் இடையிலான போர் நிறுத்தம் நேற்று முன்தினம் அமுல்படுத்தப்பட்டது.

அமெரிக்கா மற்றும் பிரான்ஸின் தரகு ஒப்பந்தத்தின் கீழ் இந்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டது.

கடந்த 14 மாத காலமாக நீடித்த போரினால் பாதிப்படைந்த இரு நாடுகளின் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்புவதை அனுமதிப்பதனை நோக்கமாகக் கொண்டு ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், தெற்கு லெபனானின் ஆறு பகுதிகளை இஸ்ரேல் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, எல்லைப் பகுதியில் உள்ள நகரங்களின் பாதுகாப்பு இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.




# இந்தோனேசிய சுமத்ரா தீவில் பாரிய நிலச்சரிவு; 27 பேர் பலி




இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 27ஆக உயர்ந்துள்ளது.

இந்தோனேசியா – சுமத்ரா தீவில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதனால் மேடான் நகரத்திலிருந்து பெரஸ்டாகி நகர் செல்லும் வீதியில் நிலச்சரிவு ஏற்பட்டது.

நிலச்சரிவின் போது சுற்றுலா சென்ற பஸ் ஒன்றின் மீது மரங்கள், மண்மேடு மற்றும் பாறைகள் விழுந்துள்ளன.

இந்த அனர்த்தத்தினால் பஸ்ஸின் சாரதி உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் சம்பவத்தின் போது காணாமல் போன பலரைத் தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் 03

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 29/11/2024

## மாட்டிறைச்சியின் விலை அதிகரிப்பு

கனடாவில் மாட்டு இறைச்சியின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பலசரக்கு கடைகளில் மாட்டிறச்சியின் விலைகள் வெகுவாக அதிகரித்துள் 02




# கனேடிய தமிழர் பேரவையினால் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது

**கனேடிய தமிழர் பேரவையினால் வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மையத்துடன் இணைந்து இலங்கையில் வெள்ள நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.**

**இந்த நிவாரணப் பணி நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பமானது.**


வடக்கு மாகாண ஆளுநர், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மற்றும் உதவி ஜீ.ஏ. ஆகியோருடன் கள நிலவரத்தை மதிப்பிடுவதற்கு ஆலோசனை நடத்தப்பட்டதுடன், நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரிவில் அமைந்துள்ள மண்ணாகண்டல் பாதுகாப்பு நிலையம், நிவாரணப் பணிகளுக்கான முக்கிய இடமாக அடையாளம் காணப்பட்டது.

இந்த மையத்தில் 479 தனிநபர்கள் அடங்கிய 147 குடும்பங்கள் உள்ளன. அவர்களில், 39 குடும்பங்களில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் உள்ளனர், மேலும் 31 குடும்பங்களில் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் உள்ளனர். உள்ளூர் அதிகாரிகளின் வழிகாட்டுதலின் அடிப்படையில், இங்குள்ள மக்களுக்கு பால் மா, சவர்க்காரங்கள் விநியோகிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களிலும் மேலதிக பாதுகாப்பு நிலையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அங்குள்ள மக்களின் தேவைகள் கவனமாக மதிப்பீடு செய்யப்பட்டு, அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப நிவாரணப் பொருள்கள் இன்றும் வழங்கப்படவுள்ளன.




Ministry of Defence
National Disaster Relief Service Centre (NDRSC)





# கனடாவில் 70,000 டொலர் பெறுமதியான போலி டிக்கட்களை விற்ற பெண் கைது

கனடாவில் சுமார் 70000 டொலர் பெறுமதியான போலி இசை நிகழ்ச்சி டிக்கட்களை பெண் ஒருவர் விற்பனை செய்துள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஒன்றாரியோவைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு முகநூல் வழியாக போலி டிக்கட்டுகளை விற்பனை செய்துள்ளார்.

பிரபல பொப்பிசைப் பாடகி டெய்லர் ஷிப்ட் இசை நிகழ்ச்சி டிக்கட்டுகள் என்ற போர்வையில் போலி டிக்கட்டுகளை மேற்படி பெண் விற்பனை செய்துள்ளார்.

அந்தப் பெண் சுமார் 28 பேரை இவ்வாறு ஏமாற்றி மோசடி செய்துள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் நடைபெறும் இசை நிகழ்ச்சிக்காக இவ்வாறு போலி டிக்கட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த மோசடியுடன் தொடர்புடைய பெண்ணை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# குளிர்காலம் தொடர்பில் கனடாவில் எதிர்வு கூறல்

கனடாவில் குளிர்காலம் தொடர்பில் அந்த நாட்டு வளிமண்ட திணைக்களம் எதிர்வு கூறல்களை வெளியிட்டுள்ளது.

புதிய பருவ மாற்றம் தொடர்பில் கனடிய வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதம வானியல் ஆய்வாளர் கிரிஸ் ஸ்கொட் எதிர்வு கூறல்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு குளிர் பருவ நிலையில் நிலவியதை விடவும் இம் முறை கடுமையான குளிருடனான கால நிலை நிலவும் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு குளிர்காலத்தில் ஓரளவு வெப்பநிலை நீடித்து வந்தது எனினும் இம்முறை அந்த பருவ நிலையில் மாற்றத்தை அவதானிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் மேற்கு பகுதிகளில் அதிக அளவு குளிர் நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இம்முறை கிறிஸ்மஸ் காலத்தில் அதிக அளவு பனிப்பொழிவு ஏற்படுமா என்பது குறித்து இப்போதைக்கு எதிர்வு கூற முடியாது என தெரிவிக்கப்படுகிறது. கிறிஸ்மஸ் காலத்தில் வெண் பனிப் படலம் படரும் சந்தர்ப்பங்களை மரபு ரீதியாக வைட் கிறிஸ்மஸ் என அடையாளப்படுத்துகின்றனர்.

## மாட்டிறைச்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு முழுவதும் இவ்வாறு மாட்டு இறைச்சியின் சில்லறை விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் போக்கு பதிவாகியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே இவ்வாறு மாட்டு இறைச்சியின் விலை உயர் வடைந்து செல்கின்றமை குறிப்பிடத் தக்கது.

கோழி மற்றும் பன்றி இறைச்சி என்பனவற்றுடன் ஒப்பீடு செய்யும் போது மாட்டு இறைச்சியின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் போக்கு பதிவாகியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மாட்டு இறைச்சி விலையின் அதிகரிப்பு வீதமும் உயர்வாக காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செப்டம்பர் மாதம் ஒரு கிலோ மாட்டிறைச்சியின் விலை 13 டொலர்களாக காணப்பட்டதாகவும் இது ஓராண்டுக்கு முன்னதாக 11 டொலர்களாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





# ஒன்றாரியோ மாகாணத்தில் கோர விபத்து; 2 பேர் பலி

கனடாவில் மற்றுமொரு கோர விபத்து இடம்பெற்றுள்ளது. ஒன்றாரியோ மாகாணத்தின் கெனோராவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கெனோராவின் 17 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ட்ரக் வண்டிகள் இரண்டின் சாரதிகள் உயிரிழந்துள்ளனர்.

சாரதிகள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மூன்றாம் வாகனத்தின் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

